**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.13/2023 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு.ரகுபதி |
| Father Name | திரு.ஆறுமுகம் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **23.03.2026.**

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

1–ம் பிரதிவாதியை எனக்கு தெரியும். 1–ம் பிரதிவாதியை மனை வாங்கி விற்கும் தொழில்ரீதியாக எனக்கு தெரியும். மனை வாங்கி விற்கும் தொழிலை சுமார் 7 வருடங்களாக செய்து வருகிறேன். வழக்கு சொத்தில் மாடி வீடு உள்ளது. அந்த வீட்டின் உரிமையாளரை நான் நேரடியாக பார்த்ததில்லை. வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேன். நான் 09.06.2022–ம் தேதி 1–ம் பிரதிவாதி எனக்கு ஒரு கிரைய ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்தார். அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை வாலாஜாவிலுள்ள திரு.விவேகானந்தன் என்ற வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. ஏற்கனவே 07.05.2021 பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் 09.06.2022 வரை ரத்து செய்யப்படவில்லை. அதன் பிறகு 6 மாதங்கள் கழித்து தான் அந்த பொது அதிகார பத்திரம் ரத்தாகிவிட்டது என்று தெரிந்துகொண்டேன். கிரைய ஒப்பந்தப்பத்திரம் உண்மையானதா என்பதை 1–ம் பிரதிவாதியை விசாரித்தால் தெரிந்துகொள்ளலாம் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சமாக இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது தெரிந்தே கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி அந்த வீட்டை காலி செய்து 2–ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிடுவதாக சொன்ன விவரம் எனக்கு தெரிந்து அதன் பிறகு தான் பொய்யாக கிரைய ஒப்பந்தப்பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய போவதாக 1–ம் பிரதிவாதிக்கு 2–ம் பிரதிவாதி அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு 2–ம் பிரதிவாதி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றாலும், அந்த விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு 31.10.2022–ம் தேதி அனுப்பிய அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. பதிவு செய்யப்படாத மற்றும் சரியாக முத்திரை ஒட்டப்படாத

கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை என் தரப்பில் ஆவணமாக குறியீடு செய்யாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், அந்த கிரைய ஒப்பந்தப்பத்திரம் என்னால் போலியாக தயாரிக்கப்பட்டது என்பதால் தான் அந்த ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை;-</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.